1975 அக்டோபர் 27]

<u>தவத்திரு குன்றக்குடி அடிகளார்:</u> நிராகரிப்பதற்குரிய காரணம் என்ன என்று அரசு அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:</u> வேறு காரணம் எதுவும் இல்லை. நிதிநிலை தான காரணம். இருந்தாலும் அந்தக் கோரிக்கையை மீண்டும் பரிவுடன் பரிசீலனை செய்து தகுந்த உத்தரவுகளைப் பிறப்பிப்பதாக அரசு இருக்கிறது.

<u>திரு. எல். பலராமன்:</u> தற்போது கொடுக்கக் கூடிய ஊதியம் குறைந்தது என்ற காரணத்தினால், கோரிக்கை வந்திருக்கின்றது. அரசு அதை நிவர்த்திக்க மறு பரிசீலனை செய்ய இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:</u> குறைந்தது, அதிகமானது என்பது அவரவர்களுடைய மனநிலையைப் பொறுத்தது. தேவைக்கு ஒரு அளவே கிடையாது.

<u>திரு. ஜி. சுவாமிநாதன்:</u> இப்போது என்ன பயணப்படி கொடுக்கப் படுகிறது, அவர்கள் இப்போது என்ன பயணப்படி கேட்டிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:</u> தற்போது வழங்கப்பட்டு வரும் தொகை ரூ. 20. அதாவது முதல் நிலை ஊர்நல உதவியாளர்களுக்குப் பயணப்படி ரூ. 20, இரண்டாம் நிலை ஊர்நல உதவியாளர்களுக்குப் பயணப்படி ரூ. 15 என்று இப்போது இருக்கிறது. அவர்கள் கேட்டிருப்பது முதல் நிலையில் இருப்பவர்களுக்கு ரூ. 40 என்றும், இரண்டாம் நிலையில் இருப்பவர்களுக்கு ரூ. 30 என்றும் கேட்டிருக்கின்றார்கள். அதாவது 'அன்ட்ரெட் பர்செனட் இன்கிரீஸ்' கேட்டிருக்கின்றார்கள்.

<u>திரு. ஜி. சுவாமிநாதன்:</u> இந்தப் பயணப்படி எந்தக் கால அளவுக்கு என்று அறிய விரும்புகிறேன். அந்த ஊர்நல உதவியாளர்கள் என்ன வேலைகள் செய்கின்றார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:</u> மாதந்தோறும் பிக்ஃசட்டாக இந்த டி.ஏ. தரப்படுகிறது. அவர்கள் என்ன வேலைகள் செய்கின்றார்கள் என்பது நம் அனைவருக்கும் தெரிந்ததே.

Diploma-holders serving in the Electricity Departments of the Madurai Corporation.

* 27. Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the Diploma-holders (L.E.E. or D.E.E.) serving in the Electricity Departments of the Madurai Corporation, have made an appeal to the Government to give them

chances of promotion without getting the services of such persons from the State Electricity Board; and

(b) if so, the action taken thereon ?

மதுரை மாநகராட்சி மின்சாரத் துறையில் பணிபுரிகின்ற பட்டயத் தகுதி பெற்றவர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) மதுரை மாநகராட்சி மின்சாரத் துறையில் பணிபுரிகின்ற பட்டயத் தகுதி பெற்றவர்கள் (L.E.E. அல்லது D.E.E படித்தவர்கள்) மாநில மின்சார வாரியத்திலிருந்து தங்களைப்போல் உள்ள பட்டயத் தகுதி பெற்றவர்களின் பணிகளைப் பெறாமலேயே, பதவி உயர்வுகளுக்கான வாய்ப்புகளைத் தங்களுக்கே அளிக்குமாறு அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) மதுரை மாநகராட்சி ஊழியர்களுக்கு தகுதி, நியமன முறை போன்ற விதிகள் இன்னும் நிர்ணயிக்கவில்லை. இந்த விதிகள் போட்ட பிறகுதான் மதுரை நகராட்சி ஆணையர் உத்தியோக உயர்வு கொடுக்கலாமா என்பதை கவனிப்பார்.

Thekkamalai—Kovilpatti Arulmigu Ayyanar Temple in Manapparai Taluk

* 28. Q.—THIRU Y. VENKATAESWARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) the extent of the land belonging to the Thekkamalai-Kovilpatti Arulmigu Ayyanar Temple in Manapparai Taluk, Tiruchirappalli District;

(b) whether the idols in the temple have been damaged by fire; and

(c) if so, the action taken thereon by the Government?